முருகப்பெருமான் துணை

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.07.2022, வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அற்புதம் நிகழ்த்தி மண்ணுலகில்
மாறுதல் செய்யவந்த தேசிகா
மார்க்கமுடன் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது மிதுன திங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 23 நாள், 07.07.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு கணம்புல்ல நாயனார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உயிர் கொலை நீக்கி உலகம்
ஞான வழி வருதல் வேண்டி
ஞானபலம் தரும் சன்மார்க்கம்
4. சன்மார்க்கம் தனை மக்கள்
சகலரும் ஏற்றுப் பின்பற்ற
துன்மார்க்கம் அனைத்தும் விலகி
தூய வழிகளாக வாழ்க்கை மாறி
5. மாறியே மக்களிடை ஆற்றல்
மரணம் வெல்லும் ஜீவ தயவாக
தெரிவிப்பேன் ஏற்றம் கண்டு
தேசிகன் வழி தெளிவும் காண்பர்
6. காண்கவே அரங்கமகான் தரும்
கட்டளையாக உபதேசங்களை
உண்மைபட திடமாகப் பற்றி
உலகம்தானும் ஆற்றல்பட மாற்றம்
7. மாற்றம் ஞானவழி காணும்
மக்களிடை அரங்கன் வழிகள்
தேற்றமுடன் எல்லாத்துறையிலும்
தேர்ச்சியும் பலமும் காண்கும்
8. காண்கவே தரும ஞானசபை
கந்தனே கலியில் படைத்த
சண்முகனார் வாழும் சூட்சும
சற்குருவான அரங்கன் குடில்
9. குடில் ஏழாம்படை வீடாக
குறைபோக்கும் ஞானவீடாக இருக்க
நாடியே உலகமக்களெல்லாம் வர
ஞானிகள் வழிகாட்டல் பெருகி

10. பெருகியே உலகமக்கள் அனைவரும்
பிரம்ம ஞான சகல சூட்சுமங்களும்
முருகப் பெருமான் அருளால் விளங்கி
முழுமை பெற்ற ஞானிகளாக மக்கள்

11. மக்களெல்லாம் உயர்ந்து இனிதே
மரணம் வெல்லும் சக்தியும்
ஆக்கமுடன் கண்டுதேறி உலகினில்
அறிவிப்பேன் ஞான ஆட்சி படைப்பர்
அருளாசி முற்றே

–சுபம்–